DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI. CC-28/2023

Prosecution witness – PW 1

Name : திருமதி.சாலியாபானு Caste:

Father's Name : Calling:

Village : Religion:

Taluk : Age:

(A1 to A3 present. A4 absent. Petition 317 Cr.p.c filed and allowed)
19.06.2025- 01.00 PM

முதல் விசாரணை:-

1. நான் சிக்கல் மதினா நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 1வது எதிரி எனது கொழுந்தன். 2வது எதிரி எனது நாத்தனாரின் கணவர். 3வது எதிரி எனது கொழுந்தனின் மனைவி. 4வது எதிரி எனது நாத்தனாரின் மகன்.

2. எனது கணவரை வேலைக்காக சவூதி நாட்டிற்கு அனுப்பி வைத்தேன். எனது கணவர் சம்பாதித்த பணம் முழுவதையும் எதிரிகளுக்கு அனுப்பி வைத்தார். எனது கணவர் வெளிநாட்டில் இருப்பதால் நான் எனது அம்மா வீட்டில் வசித்து வந்தேன். எனது கணவர் அனுப்பிய பணம் மற்றும் சொத்துக்களை வைத்துகொண்டு எங்களுக்கு தரமுடியாது என்று சொல்லிவந்தார்கள்.

3. எங்கள் தரப்பிற்கும் எதிரிகள் தரப்பிற்கும் பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 10.03.2022 ந் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். எனது கணவர் நவாஸ்கான் என்பவர் 1வது எதிரியிடம் என்னை ஏமாற்றிவிட்டாயடா என்று கேட்டுக்கொண்டிருந்தார். மற்ற எதிரிகளும் அங்கு இருந்தார்கள்.

4. 1வது எதிரி தினமும் உனக்கு இதுதானா கேள்வி என்று சொல்லி அருகில் கிடந்த கட்டைக்கம்பை எடுத்து எனது கணவரின் வலது கால் மற்றும் முழங்காலுக்கு கீழ் அடித்தார்.

5. மேலும் 2 வது எதிரி கட்டை கம்பால் எனது கணவரின் முன் நெற்றியில் அடித்தார். கம்பால் அடித்ததில் எனது கணவருக்கு மண்டை உடைந்து இரத்தம் வந்தது. அப்போது 4 வது எதிரி ரவி என்பவர் ஆபாசமான வார்த்தைகளால் பேசி எனது கணவரை காலால் மிதித்தார். 3 வது எதிரி காபிபா மற்றும் 2 வது எதிரி சதக் ஆகியோர் இருவரும் எனது கணவரை ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். எனது கணவருக்கு திட்டிய வார்த்தைகளை என்னால் சொல்ல கூச்சமாக உள்ளது. எனது கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்தார்.

6. நாங்கள் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் சொல்லி வாகனம் வந்ததும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தேன். எனது கணவர் பேச்சு, மூச்சு இல்லாமல் இருந்ததால் அன்று இரவு போலிசார் வந்து என்னிடம் விசாரித்தார்கள். சம்பவம் குறித்து நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம் படித்துக்காண்பித்தார்கள். நான் சொன்னபடி எழுதி இருந்தார்கள். நான் கையொப்பம் செய்தேன்.

7. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** எனது கணவருக்கு காலில் ஏற்பட்ட காயத்திற்கு சுமார் ஆறு மாத காலம் சிகிச்சை பெற்றார். எனது கணவருக்கு காலில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைத்தார்கள். போலிசார் என்னை சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி